2017

No. of Printed Pages : 5

2017

501714

**6911**

*Register Number*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

இரண்டாமாண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

நேரம் : 3 மணி மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I.** (அ) **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

1. இனங்குறித்தல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

2. 'கற்றாழை' - இச்சொல்லைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

3. குறிப்பு வினைமுற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

4. 'கயல்விழி ஆடினாள்'
   - இத்தொடர் அன்மொழித் தொகையாவது எங்ஙனம் ?

5. பிறிது மொழிதலணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

6. பேச்சாற்றல் குறித்து வள்ளுவர் கூறியுள்ள கருத்தைப் புலப்படுத்துக.

7. கவிதை குறித்துக் கவிமணி தேசிக விநாயகனார் கூறும் விளக்கம் யாது ?

[ Turn over

8. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி குழந்தையின் பேச்சைக் கேட்பதிலேயே ஆகும்.

1. இப்பகுதியின் மையக் கருத்து யாது ?
2. இப்பகுதியில் இடம் பெற்றுள்ள அருஞ்சொற்களை எடுத்தெழுதுக.

9. கற்பனை என்றால் என்ன ? அதன் வகைகளைக் கூறுக.

10. இருபெயரொட்டுப் பண்புத்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(ஆ) எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x4=20**

11. இயல்பு வழக்கு எத்தனை வகைப்படும் ? விளக்குக.

12. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அழியாச் செல்வத்தையே அடைய வேண்டும் என்னும் அவா நம்மெல்லாரிடத்தும் இயற்கையாக இருந்தாலும் முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும் பாசி மூடிய பவளத்தின் நிறமும், மாசில் மறைந்த மதியின் துலக்கமும், கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும் போல் நம்மை மூடிக் கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டவர்களாகி நாம் அறிவை இழந்து, அழியாச் செல்வத்தை அடைய முயலாமல், நிலையின்றி அழிந்து போகும் பொருள்களையே நிலையாகப் பிழைபட நினைந்து, அவற்றைப் பெறுவதிலும் அவற்றை நுகர்வதிலுமே நமது காலத்தைக் கழித்து வருகிறோம்.

1. இப்பகுதியின் மையக் கருத்து யாது ?
2. இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைகள் யாவை ?
3. இப்பகுதியிலுள்ள அருஞ்சொற்களை எழுதுக.
4. இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள அழகிய தொடர்கள் யாவை ?

13. கீழ்க்காணும் பாடற் கருத்தை விளக்குக.

அள்ளற் பழனத் (து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம் தீப் பட்ட தெனவெரீஇ - புள்ளினம்தம்
கைச் சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

14. காண்டகு, சேவடி - இச்சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

15. 'மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவு மாகும்'

- இந்நூற்பாவை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

16. ''தேன்'' என்னும் சொல்லின் முன் மூவின மெய்களும் எவ்வாறு புணர்ந்து வரும் ? எடுத்துக்காட்டுத் தருக.

17. மேடையில் பேசும்போது மனத்திற்கொள்ள வேண்டியவை யாவை ?

18. சிறுகதை எழுதுவதற்கு நீவிர் எத்தகைய பயிற்சிகளை வழங்குவீர் ?

## பகுதி - ஆ

**II.** (அ) அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**10x2=20**

19. பாடநூல் படைத்தலில் நான்கு நிலைகள் யாவை ?

20. சொல் எனப்படுவது யாது ? எடுத்துக்காட்டுத் தருக.

21. அரசன் என்னும் சொல்லுக்குரிய அறிந்த சொற்கள் மற்றும் பயன்படுத்தும் சொற்களை எழுதுக.

22. ஊன், ஊண் - இவ்விரண்டு சொற்களுக்குரிய பொருளைத் தொடரில் அமைத்து எழுதுக.

23. கடிதம் எழுதுதலில் எவையேனும் 4 நோக்கங்களைக் குறிப்பிடுக.

24. பிழை, தவறு வேறுபடுத்திக் காட்டுக.

25. தவறான கருத்துருவாக்கப் பிழையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

26. மாணவர்களுக்கு நல்வழிப்படுத்துவேன்.

- இத்தொடரில் அமைந்துள்ள பிழையைச் சுட்டிக்காட்டி காரணம் தருக.

27. தமிழ் இணைய மாநாடு குறித்து எழுதுக.

28. கல்விச் செயல்முறை குறிப்பிடும் மூவகை அடிப்படைக் கூறுகள் யாவை ?

(ஆ) எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**5x4=20**

29. மொழிப்பாட நூலின் இலக்கணம் யாது ?

30. மொழிப்பாடத்தில் சொல்விளையாட்டு பெறும் இடத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

31. கலந்துரையாடலைக் கையாளும்போது மேற்கொள்ளும் செயல்பாடுகள் யாவை ?

32. வேற்றுமையில் எவ்வாறெல்லாம் பிழை நேர வாய்ப்புள்ளது என்பதனைச் சான்றுடன் விளக்குக.

33. சந்திப் பிழைகளைத் தவிர்க்க நீவிர் எத்தகைய பயிற்சிகளை வழங்குவீர் ?

34. மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் சிறப்புத் தன்மைகள் யாவை ?

35. கணினிவழி மொழிக்கற்றலின் பயன்கள் யாவை ?

36. தமிழ் கற்பித்தலில் மென்பொருள் பயன்பாட்டினைப் பற்றி விளக்குக.

## பகுதி - இ

**III.** ஒவ்வொரு வினாவிற்கும் **ஐந்நூறு** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **2x10=20**

**37.** (அ) பாடநூலை ஆய்வு செய்து மதிப்பிடுவதற்குரிய பண்புக் கூறுகளை விளக்கி எழுதுக.

அல்லது

(ஆ) பேச்சாற்றல் வளர்க்கும் வழிமுறைகளை விவரிக்க.

**38.** (அ) தமிழ் இணையப் பல்கலைக்கழகச் செயல்பாடுகள் குறித்துக் கட்டுரை எழுதுக.

அல்லது

(ஆ) புறவயத் தேர்வு அமைக்கும் முறையை விளக்கி அதன் நிறை குறைகளை எழுதுக.

-oOo-